வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 07.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தனிநபர் டிஜிட்டல் தரவுகளின் பாதுகாப்பு தொடர்பான வரைவு விதிமுறைகளில், மக்களை மையமாக கொண்ட ஆளுகைக்கு, முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று நடப்பு ஆண்டிற்கான மத்திய அரசின் அதிகாரப்பூர்வ நாள்காட்டியை வெளியிட்டார்.

HMPV தாக்குதல் குறித்து, மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை என்று மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திருமதி புண்யா சலீலா ஸ்ரீவாஸ்தவா வலியுறுத்தி உள்ளார்.

புதுச்சேரியில், அரசுப் பள்ளி மாணவர்களைத் தரம் உயர்த்தவே, அரசுப் பள்ளிகள், சிபிஎஸ்இ பள்ளிகளாக மாற்றப் பட்டுள்ளதாக, கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் கூறியுள்ளார்.

------------------------

மோடி டேட்டா (14)

தனிநபர் டிஜிட்டல் தரவுகளின் பாதுகாப்பு தொடர்பாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள வரைவு விதிமுறைகளில், மக்களை மையமாக கொண்ட ஆளுகையில், நாட்டிற்குள்ள உறுதிப்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். தனிநபர் தரவுகளை

பாதுகாக்கும் அதே வேளை, புதுமையாக்க முயற்சிகளின் அடிப்படையில், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை தூண்டுவதே புதிய விதிமுறைகளின் நோக்கம் என்று, இந்த விதிமுறைகள் குறித்து மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவிற்கான பதிலில் பிரதமர் கூறியுள்ளார். வரைவு விதிமுறைகள் குறித்து, பொது மக்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும், அடுத்த மாதம் 18ஆம் தேதிக்குள், மை-கவ் இணைய தளம் மூலமாக தங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம் என்றும் அமைச்சகம் அறிவித்துள்ளது.

------------------------

*ரயில்வே* (16)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லி ரயில் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நடப்பு ஆண்டிற்கான மத்திய அரசின் அதிகாரப்பூர்வ நாட்காட்டியை வெளியிட்டார். **மக்கள் பங்கேற்பு மூலமான மக்கள் நலன்** என்னும் கருப்பொருள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நாட்காட்டி, **அனைவருக்கும் ஆதரவு-அனைவருக்கும் வளர்ச்சி** என்னும் மத்திய அரசின் குறிக்கோளுக்கு ஏற்ப அமைந்திருப்பதாக, அவர் கூறினார். தொழில்நுட்பம், வேளாண்மை, வறுமை ஒழிப்பு, மகளிர் அதிகாரப் பங்கேற்பு, உள்கட்டமைப்பு, தூய்மை, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில், நாட்டு மக்கள் மீது அரசு ஏறபடுத்தி உள்ள முக்கிய தாக்கங்களை வெளிப்படுத்தும் வகையில், நாள்காட்டியின் ஒவ்வொரு பக்கமும் வடிவமைக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இந்நிகழ்ச்சியின் போது உடன் இருந்தார். முன்னதாக, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், புதுடெல்லி ரயில் நிலையத்தில், சுமைக் கூலித் தொழிலாளர்கள், ஆட்டோ மற்றும் வாடகை கார் ஓட்டுநர்களை சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

------------------------

*வைரஸ் (18)*

HMPV தாக்குதல் குறித்து, மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை என்று மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திருமதி புண்யா சலீலா ஸ்ரீவாஸ்தவா வலியுறுத்தி உள்ளார். மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுடன், சுவாச நோய்கள் மற்றும் HMPV தாக்குதல் நிலவரம் குறித்தும், நிலவரங்களை சமாளிப்பதற்கான பொது சுகாதார நடவடிக்கைகள் குறித்தும், அவர் இன்று காணொலிக் காட்சி மூலம், மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். குளிர்காலத்தில் சுவாசப் பிரச்சனைகள் அதிகரிப்பது இயல்புதான் என்றும், நோயாளிகளின் எண்ணிக்கை, இயல்புக்கு அதிகமாக அதிகரித்தால், நிலவரங்களை சமாளிக்க நாடு முற்றிலும் தயார் நிலையில் இருப்பதாகவும், அவர் கூறினார்.

ஃப்ளூ காய்ச்சல் போன்ற நிலவரங்கள் குறித்த கண்காணிப்பு பணிகளை மறு ஆய்வு செய்து வலுப்படுத்திக் கொள்ளுமாறு, மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு மத்திய சுகாதாரத் துறைச் செயலர் அறிவுறுத்தினார். வைரஸ் கிருமிகள் பரவாமல் தடுப்பது குறித்த விழிப்புணர்வு பணிகளை தீவிரமாக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இதற்கிடையே, மஹாராஷ்ட்ர மாநிலம் நாக்பூரில் 2 குழந்தைகளுக்கும், குஜராத் மாநிலத்தில் 1 பச்சிளம் குழந்தைக்கும் HMPV தாக்குதல் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

------------------------

*அரசு சட்டம் 1 (8)*

குற்றவியல் நடைமுறை சட்டத்திற்கு பதிலாக, புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள, பாரதீய நாகரிக் சுரக்க்ஷா சம்ஹிதாவில், விசாரணைக் கைதிகளின் நலன் தொடர்பாக இடம்பெற்றுள்ள, 479ஆவது பிரிவை அமல்படுத்த, மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை, மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதுதொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சகம், மாநிலகள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச்

செயலர்களக்கு கடிதம் எழுதி உள்ளது. பாரதீய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதாவின், 479ஆவது பிரிவு குறித்து, கூடுதல் விவரங்கள்…..

(வாய்ஸ்)

*முதல் முறையாக குற்றம் புரிந்து, விசாரணைகளை எதிர்பார்த்து சிறையில் அடைபட்டுள்ள கைதிகள், தொடர்புடைய குற்றத்திற்கான அதிகபட்ச தண்டைனைக் காலத்தில், 3ல் ஒருபகுதியை சிறையில் கழித்த பின்னர், பிணையத் தொகையின் பேரில் விடுவிக்கப் படலாம் என, சட்டப் பிரிவில் வகை செய்யப் பட்டுள்ளது. இதனால் சிறைச் சாலைகளில், விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கையை குறைக்கவும் ஏதுவாகும்.*

-------------------------

*அறிவியல் கண்காட்சி 1 (18)*

புதுச்சேரியில், பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் நடைபெற்ற மண்டல அளவிலான அறிவியல் கண்காட்சியிலும் காரைக்கால், மாஹி மற்றும் ஏனாம் பிராந்திய அளவிலும் தேர்வு செய்யப்பட்ட சிறந்த அறிவியல் படைப்புகளை கொண்டு, ஏம்பலம் பிஎம்ஸ்ரீ மறைமலையடிகள் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற, மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியின் நிறைவு விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர் செல்வம், கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, பரிசுகளை வழங்கினர். மண்டல அளவில் ஒட்டுமொத்த சேம்பியன் பட்டத்தை வில்லியனூர் விவேகானந்தா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், மாநில அளவிலான ஒட்டுமொத்த சேம்பியன் பட்டத்தை முத்திரையர் பாளையம் இளங்கோவடிகள் அரசு மேல்நிலைப் பள்ளியும் வென்றன. கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட, நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளி அளவிலான பல்வேறு அறிவியல் படைப்புகள், தென்னிந்திய அளவிலான அறிவியல் கண்காட்சியில் பங்கேற்க உள்ளன.

கண்காட்சியின் நிறைவு விழாவில் கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் பேசுகையில், புதுச்சேரியில் அனைத்து அரசுப் பள்ளிகளும் சிபிஎஸ்இ

பள்ளிகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளதாகவும், அரசுப் பள்ளி மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசவும், போட்டித்

*அறிவியல் கண்காட்சி 2 (11)*

தேர்வுகளில் வெற்றி பெறவும் இதனால் ஏதுவாகும் என்றும் கூறினார். தனியார் பள்ளிகளைப் போலவே அரசுப் பள்ளிகளிலும், மாணவர்களுக்கு தரமான புத்தகப் பை மற்றும் ஷூ வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். பயிற்சி முடித்த ஆசிரியர்கள் 205 பேருக்கு, அடுத்த 10-15 நாட்களுக்குள் பணி ஆணை வழங்கப்படும் என்றும், பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள அனைத்து ஆசிரியர் பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும் என்றும் திரு. நமச்சிவாயம் தெரிவித்தார். ....

(வாய்ஸ்-நமச்சிவாயம்)

அறிவியல் கண்காட்சியின் நிறைவு விழாவில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர் செல்வம் பேசுகையில், ....

(வாய்ஸ்-செல்வம்)

கல்வித்துறை இயக்குநர் திருமதி பிரியதர்ஷினி தலைமையில்நடைபொற்ற இவ்விழாவில், இணை இயக்குநர் திருமதி சிவகாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------

பொங்கல் சந்தை (6)

அரியாங்குப்பம் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலம், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்கள் அடங்கிய, பொங்கல் அங்காடி, மற்றும், கிராமச் சந்தை, அரியாங்குப்பத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இக்கண்காட்சியில், விற்பனை அரங்குகளை அமைத்துள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இதுகுறித்து கூறுகையில்....

(வாய்ஸ்)

-------------------------

டெல்லி தேர்தல் (9)

70 உறுப்பினர் டெல்லி சட்டமன்ற தேர்தலுக்கான தேதிகளை, தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது. இதன்படி, டெல்லி சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு, பிப்ரவரி 5ஆம் தேதி நடைபெறும். வாக்கு எண்ணிக்கை பிப்ரவரி 8ஆம் தேதி மேற்கொள்ளப்படும். டெல்லி சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை, வரும் 10ஆம் தேதி வெளியிடப்பட்டு, வேட்பு மனுத் தாக்கல் தொடங்கும் என்றும், வரும் 17ஆம் தேதி வரை, வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும், தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார், இன்று புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

-------------------------

உஜ்வாலா (11)

நாட்டில் மொத்தமுள்ள எல்பிஜி இணைப்புகளின் எண்ணிக்கை, 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், 14.52 கோடியாக இருந்த நிலையில், தற்போது இது, 32.83 கோடியாக, இரண்டு மடங்கிற்கும் மேல் அதிகரித்துள்ளது. இதே கால கட்டத்தில், செயல்பாட்டு ரீதியிலான இயற்கை எரிவாயு குழாய்ப் பாதைகளின் நீளமும், 15 ஆயிரத்து 300 கிலோ மீட்டரில் இருந்து, சுமார் 25 ஆயிரம் கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது. மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள, 2024ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், இத்தகவல்கள் வெளியாகி உள்ளன. பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், மொத்தம் 10 கோடியே 30 லட்சத்திற்கும் மேற்பட்ட எல்பிஜி இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளதாகவும், அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

உணவுக் கண்காட்சி (14)

உற்பத்தி முதல், நுகர்வு வரையிலான வினியோகச் சங்கிலியில் பல்வேறு நிலைகளில் உள்ள அனைத்து வகை உணவுப் பொருட்களையும் உள்ளடக்கிய இண்டஸ் ஃபுட்-2025 கண்காட்சியை, மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் புதுடெல்லியில்

நாளை தொடக்கி வைக்கிறார். இந்த 8ஆவது இண்டஸ் ஃபுட் கண்காட்சியில், 30க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, உணவுத் துறை சார்ந்த சுமார் 2 ஆயிரத்து 300 நிறுவனங்கள் அரங்குகளை அமைக்கின்றன. சர்வதேச அளவில் புகழ்பெற்ற 35 சமையல் கலை நிபுணர்களும், இந்தியாவைச் சேர்ந்த சுமார் 100 சமையல் கலைஞர்களும், கண்காட்சியில் பங்கேற்க உள்ளனர். 7 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட சர்வதேச வர்த்தக பிரதிநிதிகளும், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய பிரதிநிதிகளும் கண்காட்சியை பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கண்காட்சியின் ஒருபகுதியாக, உணவு உற்பத்தி மற்றும் உணவு தொழில்நுட்பம் தொடர்பான 2 மெகா மாநாடுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

------------------------

*எஃகு துறை (8)*

எஃகு உற்பத்தித் துறையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டிற்காக வாய்ப்புகள் குறித்து, மத்திய எஃகு துறை அமைச்சகம் இன்று புதுடெல்லியில் கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. செயற்கை நுண்ணறிவு இயந்திரக் கற்றல் போன்ற நவீன தொழில்நுட்பங்களை எஃகு துறையில் பயன்படுத்த, அதிகத் தேவைகள் இருப்பதாகவும், அரசு அமைப்புகளால் சேகரிக்கப்படும் தரவுகளை பகுப்பாய்வு செய்ய, புதிய தொழில்நுட்பங்கள் உதவிகரமாக இருக்கும் என்றும், எஃகு துறைச் செயலர் திரு. சந்தீப் பாண்டிரிக், இந்நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தனிநபர் டிஜிட்டல் தரவுகளின் பாதுகாப்பு தொடர்பான வரைவு விதிமுறைகளில், மக்களை மையமாக கொண்ட ஆளுகைக்கு, முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று நடப்பு ஆண்டிற்கான மத்திய அரசின் அதிகாரப்பூர்வ நாள்காட்டியை வெளியிட்டார்.

HMPV தாக்குதல் குறித்து, மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை என்று மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திருமதி புண்யா சலீலா ஸ்ரீவாஸ்தவா வலியுறுத்தி உள்ளார்.

புதுச்சேரியில், அரசுப் பள்ளி மாணவர்களைத் தரம் உயர்த்தவே, அரசுப் பள்ளிகள், சிபிஎஸ்இ பள்ளிகளாக மாற்றப் பட்டுள்ளதாக, கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் கூறியுள்ளார்.